# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



**இணை இயக்குநர் /உறுப்பினர் செயலர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் மாமல்லபுரம் உள்ளூர் திட்ட குழுமம் செங்கல்பட்டு அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.A.சிவப்பிரகாசம்.A.M.I.E, M.Plan.,**

ந.க.எண்.231/2022/ மாஉ திகு, (செமா5) நாள். .05.2022

பொருள்: **குடியிருப்பு மனைப்பிரிவு** மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம். செங்கல்பட்டு - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரர் வட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், சிறுசேரி ஊராட்சி / கிராமம், சர்வே எண்கள். 24/1A1: 24/2A1A (ம) 25/2A1-ல் **0.935** ஏக்கர் மனைப்பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு திட்ட அனுமதி வழங்குதல் குறித்து.

பார்வை:

1. மனுதாரர் **Mr.A.Gerald Ebenezer,** அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்.24.01.2022 (Online Application No.20220160101030৪, Date:20.01.2022).
2. 175-வது மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும கூட்டம் தீர்மானம் எண்.2, நாள்.02.11.2021
3. இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ), அவர்களின் கடிதம் ந.க.எண்.4651/2021, நாள்:22.02.2022. (சாலை அமைப்பு வரைபடம் ஒப்படைக்க கோரியது)
4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020/போ. நாள்.24.12.2020.
5. மனுதாரர் **Mr.A.Gerald Ebenezer,** அவர்களது கடிதம் நாள். 03.03.2022 (அசல் தானப்பத்திரம் (ம) வில்லங்க சான்று சமர்ப்பிக்கப்பட்டது)
6. அரசாணை (நிலை) எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்:04.06.2004.
7. அரசாணை (நிலை) எண். 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.04.05.2017.
8. அரசாணை (நிலை) எண். 18, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண். 16, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்:31.01.2020.
9. அரசாணை (நிலை) எண். 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை [UD4(3)] நாள்.23.09.2020.

10. அரசாணை (நிலை) எண். 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை [UD(1)] நாள்:09.12.2020.
11. அரசு கடிதம் எண்:19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள்:30.08.2017.
12. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/எல்ஏ1,நாள்.08.09.2017.
13. நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.320/2022.TCP3, நாள்.07.01.2022.
14. இவ்வலுலவக கேட்பு கடிதம் இதே எண், நாள்.11.03.2022 மற்றும் 16.05.2022 (கட்டணங்கள் செலுத்தக் கோரியது)
15. மனுதாரர் Mr.A.Gerald Ebenezer, அவர்களின் கடிதம்:20.04.2022 மற்றும் 20.05.2022 (கட்டணங்கள் செலுத்தப்பட்டது)
16. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019 ந.ஊ2, நாள்.14.10.2019.
17. சார்பதிவாளர் அலுவலகம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் ந.க.எண்.16-10/22, நாள். .03.2022

**********

பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு பார்வை 3-ல் சுட்டிய இவ்வலுலவக கடிதம் நாள். 22.02.2022 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் வழங்கப்பட்டது. பார்வை 5-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக **தானப்பத்திரம் எண்.**3901/2022, **நாள்.28.02.2022**-ல் ஒப்படைக்கப்பட்டு அதன் அசல் பெறப்பட்டுள்ளது அதனை தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

1. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/மா.உ.தி.கு(செ.மா)எண்.63/2022** என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானப்பத்திரம் மேல்நடவடிக்கைகாக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.
2. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9 (ஆ)-ன் படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுலவகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு, நில அளவை துறைக்கும், தகவலுக்கு உரிய நடவடிக்கைக்கும் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

4. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5. பார்வை 2-ல் கண்ட குழும கூட்ட தீர்மானம் அதிகார பகிர்வின் படி இம்மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

6. பார்வை 13-ல் கண்ட சுற்றறிக்கையின் படி செயலாணை கடிதம் மற்றும் வரைபடத்தினை வட்டாட்சியர் தமிழ்நிலம் மென்பொருளில் பதிவேற்றம் செய்யும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகிறது.

**<u>சிறப்பு நிபந்தனைகள்</u>**

1. (a) பார்வை 10-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 8-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47 (11) ன் படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants" After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதியில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenitites like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the local body"

2. (EWS) பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் (EWS) மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020 ன் படி (EWS) மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 11 மற்றும் 12 ல் கண்ட அரசு கடிதம் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில்

உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண், உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. The Tamil Nadu Government in G.O.Ms. No.112. Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, Market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Authority- ன் படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. பார்வை 7-ல் கண்டுள்ள அரசாணையின் படி திட்டமில்லா பகுதி/திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3-ன் படி சுவராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண். 9-ன் படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/14/சிபி, நாள்.04.07.2014-ன் படி "நகர் ஊரமைப்பு துறை சட்டபூர்வமாக தொழில் நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரைய பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

7. பார்வை 6 மற்றும் 8-ல் காண் அரசாணையின் படி மனைகளுக்கான நன்னிலை வரி மற்றும் இதர கட்டணங்களான வளர்ச்சிக் கட்டணம், சுவராய்வுக் கட்டணம், Display Broad கட்டணம், Armed Force Flag day Fund கட்டணம் ஆகியவை பார்வை (14) ல் சுட்டியவாறு கோரப்பட்டு பார்வை 15-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு

செலுத்தப்பட வேண்டிய அனைத்து கட்டணங்களும் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது அதற்கான விபரம் பின்வருமாறு

i. **கூராய்வு கட்டணம் ரூ.5,800/-** IOB மாமல்லபுரம் வங்கி கிளை இவ்வலுவலக கணக்கு எண்.40000 த்தில் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் தலைப்பில் நாள்.22.02.2022 ல் செலுத்தப்பட்டு அதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

ii. **நன்னிலை வரி** கட்டணம் ரூ.7,500/-க்கான Challan No.20220418010240. Account Code.021703800AA22709. Payable at Chengalpattu. E-Challan மூலம் நாள். 19.04.2022 ல் பெறப்பட்டுள்ளது.

iii. **Display Broad** கட்டணம் **ரூ.10,000/-**க்கான IOB மாமல்லபுரம் வங்கி கிளை இவ்வலுவலக கணக்கு எண்.40000 த்தில் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், தலைப்பில் நாள்.07.04.2022 ல் செலுத்தப்பட்டு அதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

iv. **அபிவிருத்தி கட்டணம் ரூ.16,500/-**க்கான IOB மாமல்லபுரம் வங்கி கிளை இவ்வலுவலக கணக்கு எண்.40000-த்தில் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், தலைப்பில் நாள்.07.04.2022 ல் செலுத்தப்பட்டு அதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

v. **ரூ.1,500/-**க்கான **Armed Force Flag Day Fund** என்ற பெயரில் Payable at Chengalpattu, Karur Vysya Bank, Chengalpattu Branch. **D.D.No.068568.** Dt 19.04.2022 ல் பெறப்பட்டுள்ளது.

vi. **OSR கட்டணம் ரூ.8,40,000/-** Challan No.20220418010189 Account Code.021760800AM24501. Payable at Chengalpattu. E-Challan மூலம் நாள். 22.04.2022 ல் மற்றும் **ரூ.3,67,000/-** Challan No.20220518005007. E-Challan மூலம் நாள். 20.05.2022 ல் பெறப்பட்டுள்ளது.

20/05/22

இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
செங்கல்பட்டு மாவட்டம்.

20/5/22

20/5/2022

**இணைப்பு:**
1. மனைப்பிரிவு வரைபடம் (ம) மனைப்பிரிவு நிபந்தனைகள் 2 தொகுப்புகள்.
2. அசல் தானப்பத்திரம் எண் 3901/2022, நாள்.28.02.2022

பெறுநர்:
**தலைவர்,**
சிறுசேரி ஊராட்சி கிராமம்,
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்
செங்கல்பட்டு மாவட்டம்.

<u>நகல்:</u>

1. **Mr.A.Gerald Ebenezer,**

No.20/35, Casa Major Road,

Egmore, Chennai-600 008.

Ph.95975 84981

Email.kaconsulting93@gmail.com

2.உறுப்பினர் செயலர் (பொ),
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
செங்கல்பட்டு மாவட்டம்.
(இருப்பு கோப்பு)

3. **The Tamil Nadu Real Estate Regulatory Authority (TNRERA),**
No:A, 1st Floor,
Gandhi Irwin Bridge Road,
Egmore, Chennai 600 008.

4. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள்,
சி.எம்.டி.ஏ அலுலவக வளாகம்,
($2^{nd}$, $3^{rd}$, $4^{th}$ Floor), E & C மார்க்கெட் ரோடு, கோயம்பேடு,
சென்னை 600 107.
Phone No:044 29585161
Email: **<u>dtcpchennai@gmail.com</u>**

**5.வட்டாட்சியர்,**
திருப்போரூர் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

**6. உதவி இயக்குநர் (நில அளவை)**
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்
செங்கல்பட்டு மாவட்டம்.

**7.சார்பதிவாளர்,**
சார்பதிவாளர் அலுவகம்,
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

**தலைவர் சிறுசேரி ஊராட்சி அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை - திரு.சி.தேவராஜ்**

ந.க.எண். V /2022/சி.ஊ நாள்.04.07.2022

பொருள் : மனைப்பிரிவு - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - சிறுசேரி ஊராட்சி மற்றும் கிராமம், Mr.A.Gerald Ebenezer என்பவரின் சர்வே எண்கள் 24/1A1, 24/2A1, மற்றும் 25/1A1 ல் 0.935 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி அளித்து உத்திரவிடல் - சார்ந்து.

பார்வை : 1.இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களின் ந.க.எண்.231/2022/ மாஉதிகு(செ.மா5) நாள் . .05.2022
2. தானபத்திரம் எண்3901/2022 நாள்.28.02.2022
3,சிறுசேரி ஊராட்சி மன்றத்தீர்மான எண் 30, நாள். 27.06 2022
4.வங்கி வரைவோலை எண். 982332 நாள் 30.06.2022
5.பல்வகை வரவு ரசீது எண் 5460 நாள் 4|7|.2022

-------------

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், சிறுசேரி ஊராட்சி மற்றும் கிராமம், Mr.A.Gerald Ebenezer என்பவரின் சர்வே எண்கள் 24/1A1, 24/2A1, மற்றும் 25/1A1 ல் 0.935 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, பார்வை 1 யில் காணும் இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களின் நடவடிக்கையின்படி, ம.வ./மா.உ,தி,கு.(செ.மா.) எண் 63/2022 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 2 யில் காணும் தானபத்திரத்தின்படி, சாலை (875.26 சதுர மீட்டர்) பொது உபயோகம் (17.10ச.மீ) மற்றும் TNEB (17.10ச.மீ) உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து, பார்வை 3-ல் காணும் ஊராட்சி மன்றத்தீர்மானத்தின் அடிப்படையிலும், வளர்ச்சிக்கட்டணம் ரூ. 123,895/- மற்றும் கூராய்வு கட்டணம் ரூ. 1,000/- ஆக மொத்தம் ரூ. 124,895/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்) ஊராட்சிக்கு வங்கி வரைவோலையாக செலுத்தப்பட்டதின் அடிப்படையிலும், கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விணண்ப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. எனவே நில உரிமை சான்றுகள் தவறென கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்தானதாக கருதப்படும்.

2.மேற்படி மனைப்பிரிவில் தானப்பத்திரம் மூலம் பெறப்பட்ட பகுதிகளில் சாலைகள் , குடிநீர் , தெருவிளக்குகள்,மற்றும் வடிகால் வசதிகள் மனுதாரரே சொந்த செலவில் அமைத்து தர வேண்டும்.

3.சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீத உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

4. மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.

5. இம்மனைப்பிரிவில் கட்டணங்கள் தொடர்பாக ஏதேனும் தணிக்கைத்தடை ஏற்படின், அதற்கான இழப்பீட்டுத் தொகையை மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

தலைவர்
சிறுசேரி ஊராட்சி
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்

Mr.A.Gerald Ebenezer ,
No.20/35, Cass Major Road,
Egmore, Chennai- 600 008.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate